சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகம் – கன்னிமாரா பொது நூலகம், சென்னை – கன்னிமாரா பொது நூலகம் இயங்கும் நேரம் மாற்றியமைப்பதற்கு அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.88

நாள் 09.05.2017
திருவள்ளுவராண்டு, 2048
ஹேவிளம்பி வருடம்,
சித்திரை 26

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.1096, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப (கே1) த்துறை, நாள் 15.11.1994.
2. பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண்.3264/உ1/2017, நாள் 24.04.2017.

*******

ஆணை:–

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி கன்னிமாரா பொது நூலகம் வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 7.30 மணி வரையிலும் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரையிலும் வாசகர்கள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகிறது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், பொது நூலக இயக்குநர் அவர்கள் நாள்தோறும் 1,500 முதல் 2,000 வாசகர்கள் வரை நூலகத்திற்கு வருகை புரிந்து நூலகத்தை பயன்படுத்தி வருகின்றனர் என்றும், குறிப்பாக நாளிதழ்கள் / பருவ இதழ்கள் பிரிவு மற்றும் குடிமைப்பணி பிரிவுகளை வாசகர்கள் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர் என்றும், குடிமைப்பணி பிரிவு மூலம் மாணவர்கள் தேர்ச்சி பெற்று பல அரசுத் துறைகளில் பணியாற்றி வருகிறார்கள் என்றும், நூலகம் மூடும் நேரங்களிலும் குடிமைப்பணி பிரிவு மற்றும் நாளிதழ்கள் / பருவ இதழ்கள் பிரிவில் பயிலும் மாணவர்கள் தேர்வுக்கு அதிக அளவில் நூலகத்தைப் பயன்படுத்தி வருவதனால் நூலகத்தின் நேரத்தை கூடுதலாக்குமாறு அவ்வப்போது வேண்டி வருவதால் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள அரசு விடுமுறை நாட்கள் தவிர ஏனைய நாட்களில் நூலகம் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செயல்படுத்துவதற்கான ஆணை வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் பொது நூலக இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து ஏற்று, குடிமைப்பணிப்பிரிவு மாணவர்கள் மற்றும் அனைத்து தரப்பு வாசகர்கள் பயன்பெறும் வகையில் தற்போது, கன்னிமாரா பொது நூலகம் வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 7.30 மணி வரையிலும் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரையில் செயல்பட்டு வருவதை மாற்றம் செய்து, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள அரசு விடுமுறை நாட்கள் தவிர, ஏனைய அனைத்து

(த.பி.பா)

நாட்களிலும் கன்னிமாரா பொது நூலகம் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செயல்படுவதற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை–2.
கன்னிமாரா பொது நூலகம், சென்னை–8.
நகல்:–
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
அவர்களின்நேர்முக உதவியாளர்,சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை செயலாளர்அவர்களின்
நேர்முக முதன்மைச் தனிச் செயலாளர், சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்